# மஹியங்கன பிரதேச சபை
# பதுளை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 செப்தெம்பர் 24 ஆந் திகதிவரையும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 திசெம்பர் 14 ஆந் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் செயலாற்றல் தொடர்பான கணக்காய்வு அறிக்கை 2012 செப்தெம்பர் 24 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 கொடுக்கல் வாங்கல்கள், செயற்பாடுகள் மற்றும் செயலாற்றல் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

2012 மே 31 ஆந் திகதி வரையில் 03 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 வருமான நிருவாகம்

#### 2.1.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | ---------------------- | -------------- | -------------- | -------------- |
| | | ரூபா | ரூபா | ரூபா |
| | | (000) | (000) | (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 5,386 | 1,791 | 3,595 |
| (ii) | வாடகை | 6,891 | 6,777 | 118 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 2,111 | 2,111 | - |

### 2.1.2 நீதிமன்ற தண்டபணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

---------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | கணிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 1,581,835 |

### 2.1.3 கடை வாடகை

(அ) சபைக்குரிய 81 கடைகளுக்காக மதிப்பீட்டு வாடகையை விட குறைவாக மாதாந்த கடை வாடகை அறவிடப்படுகின்றமையினால் 2009 யூலை 01 தொடக்கம் 2011 திசெம்பர் 31 வரையான காலப்பதியில் சபை நிதியத்திற்கு ரூபா 7,578,000 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

(ஆ) உள்ளூராட்சி ஆணையாளரின் 1980 திசெம்பர் 31 ஆந் திகதிய 1980/46 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 7 ஆவது பிரிவின் அறிவுறுத்தல்களுக்கு முரணாக சபைக்குச் சொந்தமான 02 கடைகளை வாடகைக்கு எடுத்திருந்த வாடகையாளர்களினால் அந்த கடைகள் வேறு தரப்பினருக்கு உப வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தன.

### 2.1.4 ஏனைய வருமானம்

சபையினால் நிருவகிக்கப்படுகின்ற விடுமுறை விடுதியின் மீளாய்வாண்டின் மொத்த வருமானம் ரூபா 152,750 ஆகவும் செலவினம் ரூபா 948,149 ஆகவும் இருந்தமையினால் மீளாய்வாண்டின் போது சபை நிதியத்திற்கு ரூபா 795,399 தொகையான நிதி நட்டம் ஏற்பட்டிருந்தது.

## 2.2 செயற்பாடற்ற மற்றும் குறைவான பயன்பாடுடைய பௌதீக வளங்கள்

இராணுவத்தின் செயற் கடமைகளுக்காக எடுத்துச் செல்லப்பட்டு 2011 ஒக்தோபர் 11 ஆந் திகதி மீள சபையினால் கையேற்கப்பட்டிருந்த கெப் வாகனம் 2012 யூன் மாதம் வரையிலும் தேவையான பிரகாரம் பழுதுபார்க்கப்பட்டு பாவனைக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 போதிய அதிகார பலத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 132(ஓ) பிரிவிற்கு முரணாக அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாமல் 02 சந்தர்ப்பங்களின் போது தொண்டர் நிறுவனத்திற்கு பொருள் உதவிகளை வழங்குவதற்காக சபை நிதியத்திலிருந்து ரூபா 55,690 செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) ஊவா மாகாண சபை அரச சேவை ஆணைக்குழுவினால் கையளிக்கப்பட்ட பிரதேச சபைகளில் கனிஷ்ட ஊழியர்களைச் சேர்க்கும் அதிகாரங்களின் பிரகாரம் உள்ளூராட்சி ஆணையாளரின் எழுத்து மூல முன் அங்கீகாரம் பெறப்படாமல் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிகையை விஞ்சி சபை செயலாளரினால் நியமனங்கள் வழங்கப்பட்ட 19 கனிஷ்ட ஊழியர்களுக்காக 2011 சனவரி 01 தொடக்கம் 2011 மே 31 ஆந் திகதி வரை சபை நிதியத்திலிருந்து ரூபா 1,427,120 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 2.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

இலங்கைக் குடியரசின் தாபன விதிக் கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 12:5:2 ஆம் பிரிவின் அறிவுறுத்தல்களுக்கு முரணாக சபையின் பதவியொன்றில் பதில் கடமையாற்றும் உத்தியோகத்தருக்கு 02 சந்தர்ப்பங்களின் போது பதில் கடமையில் மேலதிக கடமைகளுக்காக ரூபா 26,178 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.